சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **169 / 2021**

பெயர்: பாரதி பி.வா.சா. 1 தேதி **10.03.2026**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. வெள்ளையம்மாள் தாக்கல் செய்த வழக்கில் எங்கள் தரப்பில் யார் எதிருரை தாக்கல் செய்தார்கள் என்றால் (சாட்சி தனக்கு புரியவில்லை என்று கூறுகிறார்). நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையை யார் எழுதிப்போட்டார்கள் என்றால் நான் தான் எழுதி போட்டேன். மூன்றாவது பிரதிவாதி என்னவேலை செய்துவருகிறார் என்றால் RI-ஆக வேலை செயதுவருகிறார். நான்காவது பிரதிவாதி என்ன வேலை செய்துவருகிறார் என்றால் இரணுவத்தில் வேலை செய்துவருகிறார். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்கின்ற விவரம் தெரியுமா என்றால் வாதிகள் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனது கொழுந்தனாரின் பெயர் ராமலிங்கம், அவர் வெள்ளையம்மாளின் கணவர். மேற்படி ராமலிங்கமும், நானும் பூர்விக சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் பிரித்துக்கொண்டோம். மேற்படி பாகம் பிரிவினையில் ராமலிங்கமும், நாங்களும் பிரித்துக்கொண்டோமே தவிர வேறு யாரையும் சேர்த்துக்கொள்ளவில்லை. மேற்படி பாகப்பத்திரம் எந்த ஆண்டு எழுதப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பாகப்பத்திரம் எழுதுவதற்கு முன்பு எனது கணவர் பெயரிலும், மேற்படி வெள்ளைம்மாள் கணவர் பெயரிலும் சில சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டியிருந்தது என்றால் சரிதான். பூர்விக சொத்தின் வருவாய்யில் இருந்து அருண்ராஜ் மற்றும் அருண்நேரு மைனராக இருந்தபொழுது எனது பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

2. அருண்ராஜ் மற்றும் அருண்நேரு-க்காக எந்த ஆண்டு கிரையம் பெறப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நாகம்மாள் என்பவர் எனது மாமியார். அவர் சில சொத்துக்களை வெள்ளைம்மாளின் கணவர் பெயருக்கு எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் அது பொய்யான பத்திரம். மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் தெரியாது. எங்களது ஊரின் தலைவர் யார் என்றால் தற்பொழுது இளங்குமரன், முன்னர் கட்டைய கவுண்டர். மேற்படி கட்டைய கவுண்டர் இருந்த சமயத்தில் சொத்துக்களை பிரிக்கவேண்டும் என்று பேசப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் கண்ட சொத்துக்களை பொறுத்து கட்டைய கவுண்டர் பிரித்து பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பிரிக்கப்பட்ட சொத்துக்களை வாதிகள்

அனுபவம் செய்துவருவதை நாங்கள் இடையூறு செய்ததால், மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கட்டைய கவுண்டர் முன்பாக எனது கணவரும், வாதியின் கணவரும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

3. எங்கள் ஊரில் ராமன் மகன் முருகன் என்பவர் இருக்கிறாரா என்றால் அவர் தற்பொழுது இல்லை, முத்து மகன் கண்ணன் என்பவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். மேற்படி மாணிக்க கவுண்டர் மகன் கட்டையன் என்பவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. மேற்படி ஊர் கவுண்டர் முன்பாக வழக்கு சொத்துக்கள் பிரிக்கப்பட்டதாகவும் அதன் அடிப்படையில் வாதிகள் வழக்கு சொத்தை அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தகராறு செய்ததால் தான் வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது கூட்டுக்குடும்பமாக இருந்த சமயத்தில் எனது பெயரில் கிரையம் பெறப்பட்டவை என்றால் சரியல்ல. பி.வ.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா-ஆ.3 அவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணம் நாங்களும், ராமலிங்கமும் எழுதிக்கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5, 6 ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.10 16:45:31 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.